**Crl.Misc.39**

**Chapter XXIII code of Criminal procedure**
**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SHOLINGANALLUR**
**DEPOSITION OF WITNESS**

**Calender : DVC.No.15/2024**
**Miscellaneous :**
**Preliminary Register :**
**Police Station :**
**Deposition of witness for : DW1 CROSS**

**Name : Rajaraman**
**Village :**
**Taluk :**
**Caste :**
**Calling :**
**Religion :**
**Age :**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.01.2026**
**(எதிர்** மனுதாரர்_**ஆஜர் , எதிர்** மனுதாரர் **தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:

1. 2007 ஆம் ஆண்டு எனக்கு திருமணம் நடைபெற்றது. எங்களது திருமணம் காதல் திருமணமாகும். எங்களுக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். இருவரும் சோழிங்கநல்லூரில் உள்ள நாராயணா ஒலிம்பி பள்ளியில் படித்து வருகின்றனர். ரமணியம் அடுக்குமாடி குடியிருப்பில் குடியிருந்து வருகிறோம். கடந்த ஒரு ஆண்டுகளாக நான் ரமணியம் அடுக்குமாடி குடியிருப்பில் குடியிருந்து வருகிறேன். நான் திருமணத்தின் போது எந்த வரதட்சணையும் பெறவில்லை. விருப்பப்பட்டு நான் எதுவும் வாங்கவில்லை எனது மனைவிக்கு அவர்கள் பெற்றோர் 50 சவரன் நகை கொடுத்தனர். அதை அவர் திரும்ப எடுத்துச் சென்று விட்டார்.

2. நான் தற்பொழுது மென்பொருள் பொறியாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் தற்பொழுது பெங்களூரில் பேசிஸ் என்ற நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். மாத வருமானம் எனக்கு ரூபாய் 3 லட்சம் ஆகும். நான் எனது மனைவிக்கு எதிராக 2021 ஆம் ஆண்டு பூந்தமல்லி நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்தேன். அதற்காக பழி வாங்குவதற்காக தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார். எனக்கு மாதம் ஒன்பது லட்சம் வருமானம் என்றால் சரியல்ல. எனது மனைவி எனக்கு எதிராக சோசியல் வெல்பார் ஆபிஸர் முன்னிலையில் 13.08.202ம் தேதி புகார் கொடுத்தார் என்றால் சரிதான். நான் அதற்கு அங்கு சென்று அந்த விசாரணையை நடத்தினேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் அந்த விசாரணையில் கொடுக்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். அந்த விசாரணையில் மனுதாரர் கொடுத்த புகாரின் நகல் வேண்டும் என்று நான் தாக்கல் செய்த மனு என்றால் சரிதான். அந்த மனுவை ப்ரொடெக்ஷன் ஆபீஸர் சோசியல் வெல்ஃபா டிபார்ட்மென்ட் காஞ்சிபுரத்தில் உள்ளவருக்கு கொடுத்தேன் என்றால் சரிதான். 04.10.2021 கடலூரில் உள்ள எனது குழந்தைகளை கடத்தினேன் என்றால் சரியல்ல.

3. நான் எனது குழந்தைகளை என்னிடம் அழைத்து வந்தேன். அந்த சமயத்தில் மனுதாரர் எனது குழந்தைகளுடன் தீன தயாளன் என்பவர் உடன் இருந்தார். 2021 ஆம் ஆண்டு எனது மனைவி குழந்தைகளுடன் தீனதயாளன் உடன் சென்றார் என்பதற்கு ஜைல்ட் ப்ரொடக்ஷன் ஆபீஸரிடம் நான் புகார் கொடுத்தேன். அந்த ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் செய்துள்ளேன். சாட்சி மீண்டும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சாட்சி அளித்தார். நடக்காத ஒரு சம்பவத்தை நான் பொய்யாக நீதிமன்றத்தில் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கடலூரில் நான் எனது மகன்களை கடத்தி விட்டதாக புகார் கொடுக்கப்பட்டு அந்த புகார்

முதல் தகவல் அறிக்கையாக Cr no:205/2021 என்று பதிவு செய்யப்பட்டது. அது யார் யார் பேரில் பதிவு செய்யப்பட்டது என்றால் என் மீது தான் புகார் கொடுக்கப்பட்டது. அந்த புகார் என் மீதும் சௌந்தர்ய மீனாட்சி என்பவர் மீதும் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். சௌந்தர்யா மீனாட்சி என்னுடைய வழக்கறிஞர் ஆவார். அவர் எனது அனைத்து வழக்குகளுக்கும் ஆஜராவார். எனது மனைவி காணாமல் போயிருந்ததாக குறிப்பிட்டு விட்டு அவர் எப்படி சோசியல் வெல்ஃபேர் ஆபீஸரிடம் புகார் கொடுப்பார் என்றால் அவர் ஒரு ஆண்டுகளாக காணாமல் தான் போயிருந்தார்.

4. அவர் சௌந்தர்யா மீனாட்சி என்பவர் எதிர் வீட்டில் தீனதயாளுடன் கணவன் மனைவியாக வாழ்ந்து வந்தார். அதன் பின்பு கடலூர் சென்று விட்டார். அதை தெரிந்து தான் மீனாட்சி சௌந்தர்யா எனக்கு வழக்கறிஞராக ஆஜரானார். அதன்பின்பு தான் இவர்கள் அவர்களையும் வழக்கில் சேர்த்து விட்டனர். அதன் பின்பு மாண்புமிகு உயர் நீதிமன்றம் அவர் தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கை ரத்து செய்து உத்தரவிட்டது. நீதிமன்றத்தில் பொய் சாட்சி அளித்தால் என்ன தண்டனை என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

5. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 21 ஆம் பத்தியில் 2022 ஆம் ஆண்டு திருவள்ளூவர் நீதிமன்றத்தில் குழந்தைகளை என்னிடம் ஒப்படைக்க கோரி மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அதன் பின்பு தான் குழந்தைகள் என்னிடம் இருந்ததால் அந்த மனுவை திரும்ப பெற்றுக் கொண்டேன். கடலூரில் எனது குழந்தைகளை அழைத்து வரும்பொழுது என்னுடன் எனது வழக்கறிஞர் சௌந்தர்யா மீனாட்சி இருந்தார் என்றால் சரிதான். புனிதா என்பவர் என்னுடன் படித்தவர். 27.09.2021 அன்று சோசியல் வெல்ஃபேர் அலுவலகத்தில் புகார் கொடுத்துவிட்டு 04.10.2021 அன்று எனது

குழந்தைகளை கடத்தி வர காரணம் என்ன என்றால் எனது குழந்தைகள் எனது மனைவி மற்றும் தீனதயாளுடன் இருந்ததால் மேலும் என்னுடைய பெண் குழந்தை வயதுக்கு வரும் பருவத்தில் வேறு ஒரு ஆணுடன் இருந்ததால் நான் அவருடைய பாதுகாப்புக்காக என்னுடன் அழைத்து வந்து விட்டேன்.

6. மனுதாரர் புகாரில் குழந்தைகளை சாலையில் வைத்து கடத்தி சென்றதாகத்தான் உள்ளது. அப்படி இருக்கும் பொழுது தீனதயாளன் அவர்களுடன் இருந்தது எப்படி தெரியும் என்றால் நான் வருவதை அறிந்து கொண்டே தீன தயாளனை சென்னைக்கு அனுப்பி விட்டனர். நான் குழந்தைகள் சாலையில் நின்று கொண்டிருந்ததால் நான் அழைத்து வந்து விட்டேன். குழந்தைகளை அழைத்து வந்த பொழுது நான் தீனதயாளனை பார்க்கவில்லை. எனது மனைவி காணாமல் போய்விட்டார் என்று குறிப்பிட்டு விட்டு கடலூரில் இருக்கும் முகவரி எப்படி தெரியும் என்றால் நான் ஒரு பிரைவேட் டிடெக்டிவ் மூலம் தெரிந்து கொண்டேன். எனக்கு மது அருந்தும் பழக்கம் இல்லை. நான் இதற்கு முன்பு ஆபீஸ் பார்ட்டியில் குடித்து உள்ளேன். வீட்டில் மனுதாரருடன் குடிப்பேன்.

7. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள புகைப்படத்தில் மனுதாரர் குடிப்பது போல் உள்ளதா அல்லது மதுவை வாயில் வைத்திருப்பது போல் உள்ளதா என்றால் வாய் அருகில் வைத்திருந்தால் குடிப்பது போல் தான். அந்த புகைப்படத்தை யார் எடுத்தார் என்றால் அவரது நண்பர்கள் எடுத்திருப்பார்கள். என்னிடம் காட்டப்படும் வாட்ஸ் அப் chat என்னுடையது அல்ல. அது கணினியில் வேறு வாட்ஸ் அப் சாட்டில் இருந்து அனுப்பப்பட்ட புகைப்படம் ஆகும். ஹேமா மற்றும் மஞ்சு எனது நண்பர்கள். அவர்களுடன் எனக்கு தகாத

உறவு உள்ளதாக எனது மனைவி கூறுகிறார் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளவர்கள் ஹேமா மற்றும் மஞ்சு என்றால் சரிதான்.

8. நான் என் மீது கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையை மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் ஸ்வாஷ் செய்துவிட்டது என்று குறிப்பிட்டேன் என்றால் எனக்கு முன்ஜாமீன் கொடுக்கும் பொழுது மாண்புமிகு உயர் நீதிமன்றம் விசாரணை நடத்தினர் என்று குறிப்பிட்டேன். ஆனால் மிஸ்டேக் ஆஃப் ஆக்ட் என்று தான் அவை க்ளோஸ் செய்யப்பட்டது. என்னிடம் காட்டப்படும் எனது வங்கி கணக்கின் கணக்கு புத்தகம் என்றால் சரிதான். 21.04.2021 முதல் 09.05.2021 எனது வங்கி கணக்கில் நான் 12 முறை டாஸ்மாக்கில் மது வாங்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். அவை எனது அலுவலகத்தில் உள்ள பார்ட்டிக்காக வாங்கப்பட்டது.

9. சோசியல் வெல்ஃபேர் கமிட்டியில் விசாரணை நடத்தப்பட்டு அவை முடிக்கப்பட்டது, அது முடித்ததற்கான எந்த ஆவணமும் என்னிடம் இல்லை. குழந்தைகள் மனுதாரருடன் இருந்தால் அவர்களுக்கும் சேர்த்து ஜீவனாம்சம் கொடுக்க வேண்டும் என்பதற்காக தான் அவர்கள் விருப்பம் இல்லாமல் குழந்தைகளை கடத்தினேன் என்றால் சரியல்ல. 2019 முதல்2021 குழந்தைகள் என்னுடன் இல்லாதபொழுது இதற்கிடையில் அவர்களை அழைத்து வராமல் ஏன் சோசியல் வெல்ஃபேர் கமிட்டி முன்பு என்கொயரி நடப்பதற்கு முன்பு சென்று அழைத்து வந்தேன் என்றால் 2019 ,2020 ஆகிய வருடங்களில் மனுதாரர் அவரது தாயார் வீட்டில் இருந்தால் அதற்கு பின்பு தான் தாயார் வீட்டிலிருந்து அவர் ஓடி விட்டார். அதன் பின்பு தீனதயாளுடன் மாங்காட்டில் இருந்தார். அதன் பின்பு கடலூர் சென்று விட்டார்.

10. எனக்கு நிறைய பெண்களுடன் தொடர்பு உள்ளதாக மனுதாரர் கூறுகிறார் என்றால் சரியல்ல. எனக்கு இதற்கு முன்பு எனது மனைவி தான் வேலை வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல. எனது மனைவி வேலை பார்த்த நிறுவனத்தில் தான் நான் டெக்னிகல் லேட் ஆக வேலை செய்தேன். ஆனால் அவருக்கும் நான் வேலை செய்ததற்கும் சம்பந்தமில்லை. எனது மனைவி HR ஆக இருந்தார். ஆனால் என்னை இன்டர்வியூ செய்தது. IT ஹெட் ஆகும். நான் எத்தனை முறை எனது மனைவியை அடித்தேன் என்றால் நான் அவரை அடித்ததே இல்லை. Whatsapp chat ல் உள்ளது நான் அனுப்பியது இல்லை மனுதாரர் அனுப்பியது. எனது வாக்கு மூலத்தில் உள்ள இரண்டாவது பத்தியில் மனுதாரரின் நகை எனது பாதுகாப்பில் இருந்தது என்றால் வீட்டில் இருந்ததை எடுத்துச் சென்று அவரது பெற்றோரிடம் கொடுத்தேன்.

11. நகையை கொடுத்த பொழுது எனது மனைவி என்னுடன் வீட்டில் இருந்தார் என்றால் என்னுடன் தான் இருந்தார். மனுதாரரின் அனுமதியுடன் தான் நான் கொடுத்தேன். அதற்கு ஆதாரம் அவர்கள் பெற்றோர்கள் தான். பேங்க் ஆப் பரோடா லாக்கர் அவரது தந்தையுடையது. என் மீது உள்ள தவறை மறைப்பதற்காக நீதிமன்றத்தில் உண்மைக்கு புறம்பாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பொய்யான சங்கதிகள் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

12. எனக்கு பல பெண்களுடன் தொடர்புடையதை எனது மனைவி கேட்டதற்கு அவரை அடித்து வீட்டை விட்டு வெளியே துரத்தி விட்டேன் என்றால் சரியல்ல. எனக்கு பல பெண்களுடன் தொடர்புள்ளதால் அதில் உள்ள whatsapp சேட்டுகளை பார்த்துவிட்டு அது தெரிந்த பின்பு அவர் கேட்ட பொழுது அடித்து துன்புறுத்தியதால் அதற்காக தான்

மனுதாரர் சோசியல் வெல்ஃபேர் ஆபிஸரிடம் புகார் கொடுத்தார் என்றாலும் அதை மறைத்து உண்மைக்கு புறம்பாக தற்போது சாட்சி  அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை

Sd/- M.N.ராஜநந்திவர்மசிவா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதிமன்றம்,
சோழிங்கநல்லூர்